# ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்

## 2018ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 3.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்
## 2018 நான்காம் காலாண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டு


தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,

பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் 2018 ஆம் ஆண்டிற்கான (தை தொடக்கம் மார்கழி) மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் (2010) ரூபா 9,644,728 மில்லியனை அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ரூபா 9,344,839 மில்லியனாகும். தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிட்ட அறிவிப்பின்படி, 2018 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 3.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது

2018 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.9 சதவீதம், 27.0 சதவீதம், 56.8 சதவீதம் மற்றும் 8.3 சதவீதமாக பதிவு செய்துள்ளதுடன்,

2017 ஆம் ஆண்டில் பதிவான 0.4 சதவீத சுருக்கத்தை ஒப்பிடும்போது விவசாயப் பணிகள் 2018 ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்தால் சாதகமாக விரிவடைந்தது. கைத்தொழில் நடவடிக்கைகள் 0.9 சிறிய நேர் வளர்ச்சி சதவீதத்தால் விரிவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சேவை நடவடிக்கைகள் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதமாக 4.7 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது.

### விவசாய துறையின் செயற்பாடு

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பெரும்பாலான முக்கிய விவசாய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க சாதகமான வளர்ச்சி வீதங்களைகளைப் பதிவு செய்துள்ளன. 'நெல் வளர்ச்சி' 2017 ஆம் ஆண்டில் 7.1 சதவீத மறை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்ததுடன், 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 33.9 சதவீத முனைப்பான நேர் வளர்ச்சி வீதத்தை காட்டியுள்ளது. மேலும் 'பழங்களின் வளர்ச்சி', 'நன்னீர் மீன்பிடி', 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி', 'கால்நடை உற்பத்தி', 'தானியங்களின் வளர்ச்சி', 'காய்கறிகளின் வளர்ச்சி' என்பன முறையே 11.2 சதவீத, 7.1 சதவீத, 6.3 சதவீத, 5.3 சதவீத, 4.7 சதவீத, 2.8 சதவீத மற்றும் 2.6 சதவீதத்தால் நேர் வளர்ச்சி விகிதங்களை பதிவு செய்துள்ளன. எனினும் சில விவசாய நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் எதிர்மறையான வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, 2018 ஆம்

ஆண்டுக் காலப் பகுதியில் 'கடல் மீன்பிடி', 'காடாக்கலும் குத்திகளும்', 'தேயிலை வளர்ச்சி ', 'இறப்பர் வளர்ச்சி' என்பன முறையே 2.0 சதவீத, 0.9 சதவீத, 0.8 சதவீத, 0.6 சதவீதங்களால் குறுக்கப்பட்டுள்ளது.

**கைத்தொழில் துறையின் செயற்பாடு**

கைத்தொழில் துறை நடப்பு விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 27.0 சதவீத பங்களிப்பை செய்ததுடன், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 0.9 சிறிய சதவீதத்தால் மேலும் தொடர்கிறது. மொத்த உற்பத்தி நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் 3.0 சதவீதத்தால் மேலும் விரிவடைந்திருப்பதுடன், 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி' மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி', நடவடிக்கைகள் முறையே 5.5 சதவீத, 3.6 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் ஆதரவளித்துள்ளன. 'அடிப்படை உலோக மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி', 'ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்', மற்றும் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு பொருட்கள் உற்பத்தி' நடவடிக்கைகள் முறையே 7.1 சதவீத, 6.7 சதவீத மற்றும் 2.4 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களால் பிரதானமாக ஆதரவளித்துள்ளன. எவ்வாறினும் 'நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள்' மற்றும் கடுதாசிப் பொருட்கள் உற்பத்தி', 'பொறி மற்றும் இயந்திரம் உற்பத்தி' நடவடிக்கைகள் முறையே இக் காலப் பகுதியில், 8.2 சதவீத 4.1 மற்றும் 1.4 சதவீத மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

கைத்தொழில் பிரிவுகளுக்கிடையில் 'மின்சாரம்,வாயு,நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' ,'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' என்பன முறையே 4.1 சதவீத மற்றும் 4.0 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' 5.1 சதவீதத்தால் வீழ்ச்சியை காட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கைத்தொழில் துறையின் உயர் பங்களிப்பாளரான (7.3 சதவீத) 'கட்டிடவாக்கச் செயற்பாடுகள்' 2.1 சதவீதத்தால் குறுக்கப்பட்டுள்ளது.

**சேவைத் துறையின் செயற்பாடு**

முன்னைய வருடம் 2017 உடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் மூன்று பிரதான நடவடிக்கைகளில், சேவைத் துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை (56.8 சதவீத) இது வழங்குவதுடன் 4.7 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', 'தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள்', 'காப்புறுதி நடவடிக்கைகள்', 'தொலைத்தொடர்பு' 'தங்குமிடம் உணவு மற்றும் குடிபானப் பணிகள்', 'மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்', 'ஏனைய தனிப்பட்ட பணிச் செயற்பாடுகள்', 'என்பன குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 11.8 சதவீத, 10.8 சதவீத, 10.0 சதவீத, 9.4 சதவீத, 5.5 சதவீத, 5.0 சதவீத மற்றும் 4.8 சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தாங்கி நிற்கிறது. இக் கால இடைவெளியில் 'நிகழ்ச்சித் திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புச் செயற்பாடுகள்' மற்றும் 'பொது நிர்வாகம் பாதுகாப்பு' 7.0 மற்றும் 0.6 சதவீத கணிசமான சுருக்கத்தையும் காட்டுகிறது .

**2018 நான்காம் காலாண்டுக்கான செயற்பாடு**

2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் ரூபா 2,680,362 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போது 1.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளதென தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடுகிறது. 2018 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில், விவசாய துறையின் செயற்பாடு, கணிசமான விரிவாக்கத்தின் 4.5 சதவிகிதம் பதிவாகியுள்ளது. சேவைத் துறை 4.3 சதவீத குறிப்பிடத்தக்க நேர் வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்கின்றது. இவ்வேளையில் கைத்தொழில் துறை 3.6 சதவீத மறை வளர்ச்சியை 2018 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் பதிவு செய்கின்றது.

2018 ஆம் ஆண்டுக்கான மற்றும் நான்காம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் அரச அறிவித்தலின் வெளியீட்டின்படி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.statistics.gov.lk

திருமதி. ஐ.ஆர். பண்டார

பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்